தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011–2012)

(பதினான்காவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

24–11–2011 ஆம் நாளன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள்: 17 APR 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011–2012)

(பதினான்காவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

24–11–2011 ஆம் நாளன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	..	iii
2.	அறிக்கை	..	v
	இணைப்பு–I	..	1-12
	இணைப்பு–II	..	15-59
	இணைப்பு–III	..	63-69

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் அமைக்கப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. நா. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்.

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மனுக்கள் குழு (2011-2012)
(பதினான்காவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

முன்னுரை

2011–2012–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14–07–2011–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் தஞ்சாவூர் மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 24–11–2011 ஆம் நாளன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அம்மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 2079 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 73 மனுக்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 70 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாளன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள கூட்ட அரங்கில் குழு கூடியது.

•

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்கள், குழு முன் பதிலளித்தனர். மனுதாரர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 70 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 15 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 47 மனுக்கள் மீது அரசுத் துறைகளால் அளிக்கப்பெற்ற பதிலுரைகள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 8 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாக கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

11–4–2012 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
11–4–2012,
பங்குனித் திங்கள் 29ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	2329	திரு. க. கண்ணதாசன், த/பெ. கலியபெருமாள், தென்னங்குடி படுகை, தென்னங்குடி அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் வட்டம். தென்னங்குடி கிராமத்தில் உள்ள வடவாற்றின் குறுக்கே கான்கிரீட் நடைபாலம் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பிள்ளையார் நத்தம் ஊராட்சி தென்னங்குடி கிராமத்தில் உள்ள வடவாற்றின் குறுக்கே கான்கிரீட் நடைபாலம் கட்டித்தரகோரி மனுதாரர் தெரிவித்த இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததில் தென்னங்குடி படுகையில் வடவாறு வடக்கு கரையில் சுமார் 30 குடும்பங்கள் வசிக்கின்றனர். தற்போது மூங்கில் பாலத்தின் வழியாக பள்ளிக்குழந்தைகள் மற்றும் விவசாயிகள் வந்து செல்கின்றனர். ஆற்றின் நீர் வழிப் பாதை 72 மீட்டர் உள்ளது. ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் (Ref No. CRD & PR Circular No 81058/2009/TUS dated Approved the Committee date 23–04–2010) கடிதப்படி 60 மீட்டர் நீளம் வரைதான் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பாலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தஞ்சாவூர் அவர்களின் வழியாக அரசுக்கு அறிக்கை அனுப்பி அரசிடமிருந்து அனுமதி வரப்பெற்றவுடன் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தஞ்சாவூர் அவர்களின் கடித எண் 5851 2011 அ5 நாள் 27–10–2011.)	தஞ்சாவூர் மாவட்டம் தென்னங்குடி கிராமத்தில் உள்ள வடவாற்றின் குறுக்கே கான்கிரீட் நடைபாலம் கட்டுவதற்கு சிறப்பு அனுமதி பெற்று செயற் பொறியாளர் மூலம் ஆய்வு செய்து இப்பணியை செய்து முடிக்குமாறு திட்ட அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	2334	திரு. ஜெ. தங்கராசு, ஊரணிபுரம் அஞ்சல், ஓரத்தநாடு வட்டம். தஞ்சாவூர் மாவட்டம்– 614 631.	தஞ்சையிலிருந்து ஊரணிபுரம் வழியாக பட்டுக்கோட்டைக்கு பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தஞ்சாவூரிலிருந்து ஊரணிபுரம் வழியாக பட்டுக்கோட்டைக்கு தடம் எண். 478எல் மூலம் 4 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் பட்டுக்கோட்டையிலிருந்து தடம் எண். சி18 மூலம் வெட்டிக்காடு வரையில் 12 நடைகளும், ஏ25 மூலம் ஊரணிபுரம் வரை 12 நடைகளும் 493 மூலம் 8 நடைகளும் இயக்கப்படுகிறது. தஞ்சாவூரிலிருந்து சில்லத்தூர் வரை தடம் எண். ஏ36 மூலமாக 12 நடைகளும், ஏ36ஏ மூலமாக 12 நடைகளும் போதுமான அளவு பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளது. இதுவே இத்தடமக்களுக்கு போதுமானதாகும்.

(மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் அவர்களின் கடித எண். த.அ.போக. கும்ப/சிடி7/த 152/ 2011 நாள் 29–10–11.)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கூறியுள்ள வழித்தடத்தில் பேருந்து செல்கிறதா என்பதை கண்காணிக்க ஒரு ஆய்வாளரை நியமித்து ஆய்வு செய்யுமாறு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம், பொது மேலாளருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	2335	திரு. ஜே. தங்கராஜ், ஊரணிபுரம் அஞ்சல், ஓரத்தநாடு வட்டம்.	கழிவுநீர் தேங்கி இருப்பதால் வடிகால் வசதி அமைத்துதர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடமானது ஒரத்தநாடு (நெ) உட்கோட்டப்பராமரிப்பில் உள்ள திருக்காட்டுப்பள்ளி – செங்கிப்பட்டி – பட்டுக்கோட்டை சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 57/2–57/8 வரையுள்ள கட்டிடங்கள் நிறைந்த பகுதியாகும். இச்சாலைப்பகுதி இருவழித்தட அகலத்தில் நல்ல நிலையில் உள்ளது. இப்பகுதியில் மழைநீர் தேங்காவண்ணம் வடிகால் வசதியுடன் சாலையினை உயர்த்தி அமைத்திட முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் அரசுக்குப் பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(கோட்டப் பொறியாளர் (நெ.)க(மே)ப. தஞ்சாவூர் அவர்களின் கடித எண். ந.க. எண். 2508–8/2011/இவ.அ2/நாள் 31–10–2011.)

குழுவின் பரிந்துரை

(6)

வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை கண்டிப்பாக நிறைவேற்றித் தருமாறு தஞ்சாவூர், கோட்டப் பொறியாளர் (நெ.)–க்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2342	திரு. பீ.வி. குமார், தலைவர் ஸ்ரீராம நகர அதன் கூட்டமைப்பு நகர்கள் விரிவாக்கம் குடியிருப்போர் நல சங்கம். மாதாக்கோட்டை சாலை, நாஞ்சிக்கோட்டை (பஞ்சாயத்து), தஞ்சாவூர்.	தொலைதூர விரைவு போக்குவரத்து பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தின் அருகில் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்து நிலையம் தஞ்சை நகரின் மத்தியில் உள்ளதால் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொலைதூரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. தென் மற்றும் மேற்குபுறம் செல்லும் தொலைதூரப் பேருந்துகள் புதிய பேருந்து நிலையம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

(மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் அவர்களின் கடித எண். த.அபோக கும்ப/சிடி7/த 152/2011 நாள் 29–10–2011.)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரரின் கோரிக்கையின்படி தஞ்சாவூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் கலந்தாலோசித்து பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2361	திரு. எஸ். பூமிநாதன், த/பெ. சாமிநாதன், சிதம்பரநாதபுரம்.	சிதம்பரநாதபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் கால்நடை பட்டி கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருப்பந்தாள் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிதம்பரநாதபுரம் ஊராட்சி மன்றம் அருகில் ஏற்கனவே உள்ள கால்நடைப் பட்டி பழுதடைந்த நிலையிலுள்ளது. புதிய கால்நடை பட்டிகள் கட்டும் திட்டமோ, பழுதடைந்த கால்நடைப்பட்டிகளைப் புதுப்பிக்கும் திட்டமோ தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டத்தில் இல்லை. அரசின் சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டால் அதன்மூலம் மனுதாரர் கோரியுள்ள கால்நடைப்பட்டி கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருப்பனந்தாள் அவர்களின் கடித எண். ந.க. 220/2011/அ2, நாள் 28–10–2011.)	மனுதாரர் கோரும் இடத்தில் கால்நடைபட்டி அவசியம் அமைத்துத்தரப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	2363	கிராமவாசிகள், கோவில்பத்து	ஆனந்த காவேரி ஆற்றில் கோவில் பத்து, குமிழி அருகே பாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

2009–2010–ம் ஆண்டு கோவில் பத்து ஊராட்சி குமிழி அருகே பாலம் அமைக்க ரூ. 28.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஒருங்கிணைந்த நிர்ணயம் செய்யப்பட்ட வருவாய் இனம் திட்டத்தின்கீழ் பாலம் அமைக்க தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ந.க.எண் 2716/2010/அ4 நாள் 30–6–2010 மூலம் அனுமதிக்கும் நிதி ஒதுக்கீடும் கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பட்டவுடன் இப்பணி செய்து முடிக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) பூதலூர், அவர்களின் கடித எண் 3101/2011/அ6, நாள் 28–10–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் பாலம் கட்டும் பணியினை சிறப்பு அனுமதியின் பேரில் செய்வதற்கு ஊரக வளர்ச்சித் துறை ஆணையருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	2370	மானோஜிப்பட்டி கிராம மக்கள் மருத்துவக்கல்லூரி சாலை, நீலகிரி ஊராட்சி தஞ்சை ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் வட்டம், மானோஜிப்பட்டி கிராமம், மதுபானக்கடை எண். 8123–ஐ இடமாற்றம் செய்யக்கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

தஞ்சாவூர் வட்டம் மானோஜிப்பட்டி கிராமம் மதுபான கடை எண் 8123–ல் தினசரி சராசரி ரூ. 55,000/–, ஞாயிற்றுக்கிழமை ரூ. 75,000/–விற்பனை வசூல் ஆகிறது. கடை எண் 8123 கடந்த 8 வருடங்களாக அதே இடத்தில் இயங்கிவருகிறது இக்கடையினால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் எழவில்லை. எனவே இந்த கடையை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

[உதவி ஆணையர், (கலால்)பொ.) தஞ்சாவூர் அவர்களின் கடித எண். ந.க. 58013/2011 எக்ஸ் 1, நாள் 17–11–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

சாதிக்கலவரம் அதிகம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் மனுதாரர் கோரியுள்ள மதுபானக் கடை இடமாற்றம் குறித்து ஆய்வு செய்து குழுவிற்கு தெரிவிக்குமாறு உதவி ஆணையருக்கு (கலால்) குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	2372	திரு. குருசாமிநாதன் தலைவர், திருவள்ளுவர் தமிழ்பேரவை, 35, புஷ்பமண்டப தெரு, திருவையாறு.	தனியார் கட்டிடத்தில் இயங்கி வரும் திருவையாறு அரசு நூலகத்தை திருவையாறு பேரூராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கூடம் அல்லது அலுவலக வளாகத்தில் உள்ள இலவச வாசக சாலை அல்லது அரசர் கல்லூரி அருகில் உள்ள சத்திரம் சமுகநல கட்டிடம் ஆகிய ஏதேனும் ஒன்றில் தற்காலிகமாக செயல்பட கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

திருவையாறு பேரூராட்சியில் நூலகம் அமைப்பதற்கு போதிய இடவசதி இல்லை. மனுதாரர் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார மையம் சத்திரம் நிர்வாகத்திற்கு சொந்தமானது. மேற்படி கட்டிடம் செயல் அலுவலரால் தல ஆய்வு செய்யப்பட்டது அக்கட்டிடத்தில் முன்பகுதியில் யானைக்கால் நோய் தடுப்பு, கருவுற்ற மகளிருக்கான ஊட்டச்சத்து மற்றும் நோய்தடுப்பு மையம் ஆகியவை இயங்கி வருவது அறியப்பட்டது. இதுதொடர்பாக சத்திர நிர்வாகத்தை நேரிடையாக தொடர்பு கொண்டதில் மேற்காணும் காரணங்களினால் நூலக கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி அளிக்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செயல் அலுவலர் தேர்வுநிலை பேரூராட்சி, திருவையாறு. அவர்களின் கடித எண். 340/2011/அ1/நாள் 24–10–2011.)

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் கோரியுள்ள திருவையாறு பேரூராட்சியில் நூல்நிலையம் அமைத்திட ஏதேனும் ஒரு இடத்தை தேர்வு செய்து அவரது கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	2375	திரு. டீ. சரவணபவன் மற்றும் கிராம பொது மக்கள் துலுக்கவிடுதி தெற்கு, ஆவணம் அஞ்சல், பேராவூரணி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்–614 623.	துலுக்கவிடுதி தெற்கு பேருந்து நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளையும் நிறுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
பட்டுக்கோட்டை – புதுக்கோட்டை பிரதான சாலையில் உள்ள துலுக்கவிடுதி தெற்கு பேருந்து நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளும் (தொலைதூர பேருந்துகள் தவிர நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லப்படுகிறது. மேலும் அவ்வப்போது பரிசோதகர்களைக் கொண்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. [மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம் அவர்களின் கடிதஎண். த.அ.போக. கும்ப/சிடி7.த 152/2011, நாள் 29–10–2011.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடங்களில் பேருந்து நின்று செல்கிறதா என்று ஒரு ஆய்வாளரை நிறுத்தி கண்காணிக்குமாறு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கிளை மேலாளருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	2377	திரு. எஸ். ஜெயமால்ராவ் தலைவர், செந்தமிழ்நகர், பாப்பா நகர், விஸ்தரிப்பு, வேலாயுதம் மன்னையார் நகர் குடியிருப்போர் நல சங்கம், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்.	நாஞ்சிக்கோட்டை ஊராட்சி பாப்பாநகர் விஸ்தரிப்பு 2–ல் உள்ள இரண்டாம் தெரு மற்றும் வேலாயுதம் மன்னையார் நகர், தார்சாலை அமைத்திட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
நாஞ்சிக்கோட்டை ஊராட்சி மனுதாரர் தெரிவிக்கப்பட்டுள்ள செந்தமிழ் நகர், பாப்பா நகர், விஸ்தரிப்பு 1.2 (300 + 300) 600 மீட்டர் ஆகும். வேலாயுதம் மன்னையார் நகர் 350 மீ மண் சாலையாக உள்ளது. இச்சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்ய 18.05 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியிலிருந்து மேற்கொள்ள தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களிடம் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி வரப்பெற்றவுடன் பணி மேற்கொள்ளப்பட்டு தார்சாலை பணி செய்து முடிக்கப்படும்.	பொது நிதியிலிருந்து கூடியவரை அதிக தொகைகள் ஒதுக்கி மீதத்தொகையை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று இப்பணியை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தஞ்சாவூர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தஞ்சாவூர், அவர்களின் கடித எண் 5851/2011/அ5/ நாள் 27–10–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	2381	திரு கே. மதியழகன், நாட்டாண்மைகாரர், கொடிக்காலூர், கரந்தை, தஞ்சாவூர்.	வார்டு எண். 4 கொடிக்காலூர் பகுதியில் உள்ள சாலைகளை அகலப்படுத்தி சீரமைத்து தரக் கோருதல்.

துறையின் பதில்.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
தஞ்சாவூர் நகராட்சி வார்டு எண். 4 கொடிக்காலூர் பகுதியில் 33.30 லட்சத்தில் TOURIEF திட்டத்தின் கீழ் பணி தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரும் நிலையில் உள்ளது.	மனுதாரர் கோரிக்கையை ஒரு மாதத்திற்குள் விரைந்து முடித்துத் தருமாறு தஞ்சாவூர் நகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

(ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண். 13465/2011/ இ3, நாள் 01–11–2011.)

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	2382	திரு கே. மதியழகன், கொடிக்காலூர், கரந்தை, தஞ்சாவூர்.	வார்டு எண். 4 கொடிக்காலூர் கரந்தை சமுதாய கூடம் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுதாரர் கோரிய சமுதாயக்கூடம் கட்ட போதுமான இட வசதி இல்லாததால் இடம் தேர்வு செய்த பின்பு திட்டப்பணிகளில் முன்னுரிமை கொடுத்து கட்டி தரப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ஆணையர் தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண். 14148/2011/ இ1, நாள் 31–10–2011.)	மனுதாரர் குறிப்பிட்டுள இடத்தை பார்வையிட்டு சமுதாயக் கூடம் கட்டும் பணியை செய்து கொடுக்குமாறு தஞ்சாவூர் நகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	2383	திரு. N.S. இளையராஜா, தெற்கு மானோஜி பட்டி. மருத்துவ கல்லூரி சாலை, தஞ்சாவூர்–4.	தெற்கு மானோஜி பட்டி சாலை – கிருஷ்ணநகர் தனலெட்சுமி காம்ப்ளக்ஸ் அருகில் உள்ள மின்சார டிரான்ஸ்பாரம் 200 மீட்டர் தள்ளி வைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மானோஜி பட்டி சாலை தனலெட்சுமி காம்ப்ளக்ஸ் அருகில் உள்ள மின்மாற்றி சாலைக்கு எவ்வித இடையூரும் இன்றி உள்ளது, இருந்த போதிலும் கோரிக்கைதாரரின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றியமைப்பதற்கு DCW திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகை செலுத்த சம்மதித்து விண்ணப்பித்தால் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு மதிப்பீட்டுத் தொகை செலுத்தியவுடன் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. [மேற்பார்வை பொறியாளர், தமிபவ தஞ்சாவூர் அவர்களின் கடிதம் எண்/ மே.பொ./தமிபவ்.தஞ்./உசெபொ/வளர்ச்சி முநிவு/கோ/ நாள் 12–10–2011.]	மின்சார வாரிய மேற்பார்வை பொறியாளர், சட்டமன்ற உறுப்பினருடன் சென்று மனுதாரர் குறிப்பிட்ட இடத்தை ஆய்வு செய்து டிரான்ஸ்பார்மரை இடையூறு இல்லாமல் அமைக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	2392	திரு. க. சோமசுந்தரம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வாண்டையார் இருப்பு அஞ்சல், ஓரத்தநாடு வட்டம், தஞ்சாவூர்.	பகுதி நேர கால்நடை கிளை நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

தற்போது துறையுண்டார் கோட்டையில் கால்நடை கிளை நிலையம் இயங்கிவருகிறது.

மனுதாரரின் ஊரான வாண்டையார் இருப்பு கிளை நிலையம் இயங்கும் துறையுண்டார் கோட்டையிலிருந்து 2 கி.மீ. மற்றும் பொன்னாப்பூர், கால்நடை மருந்தகத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது.

வாண்டையார் இருப்பு /18வது கால்நடை கணக்கெடுப்பின்படி.

கால்நடைகள் எண்ணிக்கை

பசுவினம்	446
எருமையினம்	22
வெள்ளாடு	—
செம்மறியாடு	—
கோழிகள்	418
மொத்தம்	886

துறையில் பகுதிநேர கால்நடை கிளை நிலையம் எதுவும் ஒப்பளிக்கப்படவில்லை. ஆகவே பகுதிநேர கால்நடை கிளை நிலையம் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, தஞ்சாவூர். அவர்களின் ந.க. எண். 3572–இ–2011 நாள். 27–10–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

நடமாடும் மருத்துவக்குழு வாரத்திற்கு ஒரு நாள் அந்தக் கிராமத்திற்குச் சென்றுவர வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	2393	திரு. அ. பிச்சை தேவர், முன்னாள் ராணுவவீரர், தேவபுரம், கீழவன்னிப்பட்டு.	கீழவன்னிப்பட்டு ஊராட்சி தேவபுரம் பொதுமயானத்திற்கு செல்ல சாலை வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மனுதாரரால் அகலப்படுத்த கோரப்பட்டுள்ள மயான நடைபாதை தற்பொழுது ஜாதி இந்துக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி நடைபாதை தனியார் பட்டா நிலங்களில் அமைந்துள்ளது. அப்பாதைதான் தற்பொழுது மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. நில உரிமையாளர்கள் மேற்படி நடைபாதையை அகலப்படுத்த சம்மதம் அளிக்காமையால் சாலையை அகலப்படுத்த இயலவில்லை.


[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) ஓரத்தநாடு அவர்களின் கடித எண். 4068/2011/அ7, நாள் 28–10–2011.]

குழுவின் பரிந்துரை.

(6)

கீழவள்ளிப்பட்டு ஊராட்சி தேவபுரம் பொது மயானத்திற்கு செல்லும் சாலையை சீரமைக்க ஆய்வு செய்ய ஒரத்தநாடு வருவாய் கோட்ட அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	2321	திரு. இரா. கோவிந்தராசன், 26, கொடிக்காலூர் பழைய தெரு, கரந்தட்டாங்குடி அஞ்சல், தஞ்சாவூர்–613 002.	கொடிக்காலூருக்கு மினி பேருந்து வசதி கோருதல்

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
இவ்வலுவலகத்தில் மினி பேருந்திற்கு தஞ்சாவூரிலிருந்து கொடிக்காலூர் தடத்தில் இயக்க அனுமதி சீட்டு ஏதும் வழங்கப்படவில்லை மேலும், தற்போது மினி பேருந்திற்கு புதிய அனுதிச்சீட்டு வழங்குவது அரசுத் துறையில் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. (வட்டாரப் போக்குவரத்து அலுவலர், தஞ்சாவூர் அவர்களின் கடித எண். 49078/இ1/2011. நாள் 01–11–2011.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	2323	செயலாளர், புறநகர் சங்கங்கள் ஒருங்கிணைந்த நூறு நகர்களின் கூட்டமைப்பு, மனை எண். 46, மூவேந்தர் நகர், மன்னார் சரபோஜி கல்லூரி அஞ்சல், தஞ்சாவூர்–613 005.	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி, தஞ்சாவூர் ஒன்றியம், நாஞ்சிக்கோட்டை சாலை, தார்சாலை கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
நாஞ்சிக்கோட்டை ஊராட்சி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள மூவேந்தர்நகர் கீதா நகர், குறுக்குத் தெரு நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. மூவேந்தர் நகர், கீதா நகர், ஓர் அடுக்கு கப்பி சாலையாக உள்ளது. இதன் நீளம் தலா 412 மீட்டர் உள்ளது. கீதா நகர் குறுக்குத் தெரு 100 மீட்டர் மண்சாலையாக உள்ளது. மூவேந்தர் நகர், கீதா நகர் தார் சாலையாக மேம்பாடு செய்ய ரூ. 9,70,000/– ஆகும். கீதா நகர் குறுக்குத்தெரு தார் சாலையாக மேம்பாடு செய்ய ரூ. 1,69,000/– ஆகும். அனைத்து கிராமங்களிலும் தாய் சர்வே திட்டத்தின்கீழ் சர்வே பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்வே முடிந்து அரசிற்கு அறிக்கை அனுப்பி வைத்து அனுமதி வரப்பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் தார்சாலை மேம்பாடு செய்யப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), தஞ்சாவூர் அவர்களின் கடித எண். 5851/2011/இ5/ நாள் 27–10–2011.]	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	2324	திரு. நாஞ்சி ப. சேகர், புரவலர் புறநகர் சங்கங்கள் ஒருங்கிணைந்த நூறு நகர்களின் கூட்டமைப்பு. மனை எண். 154, விக்னேஷ் காம்ப்ளக்ஸ், காவேரி நகர், 8வது தெரு, தஞ்சாவூர்.	தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் முதல் செங்கிப்பட்டி வரை மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
கோரிக்கை தடத்தில் காலையில் சி74 என்ற நகரப் பேருந்து மூலம் செங்கிப்பட்டி வரையும், V–11 என்ற தொடர் பேருந்து திருமலைசமுத்திரம் வரையிலும், மாலையில் ஏ41 சண்முகா கல்லூரி வரையிலும் நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சாவூர்–திருச்சி இயக்கப்படும் அனைத்து கழக பேருந்துகளும் செங்கிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல ஓட்டுநர் நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அவ்வப்போது பரிசோதகர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டும் வருகின்றது. இதுவே இத்தட மக்களுக்கு போதுமானதாகும். [மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட். கும்பகோணம் அவர்களின் கடித எண்.த.அ.போக.கும்ப/சிடி7/த/152/2011, நாள் 29–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2325	திரு. நாஞ்சி ப. சேகர், தலைவர், புறநகர் சங்கங்களின் ஒருங்கிணைந்த நூறு நகர்களின் கூட்டமைப்பு, மனை எண். 154, விக்னேஸ் காம்ப்ளக்ஸ், காவேரி நகர் 8வது தெரு, தஞ்சாவூர்.	புதிய பேரூந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கூடுதலாக மேற்கூரைகள் அமைத்து சிமெண்ட் தளம் அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல், பாதுகாவலர் நியமிக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மனுதாரர் கோரியுள்ள புதிய பேரூந்து நிலைய இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் தற்போது பொது ஏலம் விடப்பட்டுள்ளது. குத்தகைதாரரின் குத்தகை காலம் 31-3-2012 முடிவடைந்தவுடன் மேற்படி இடம் சிமெண்ட் தளம் அமைத்து கூடுதலாக மேற்கூரை அமைத்து சிமெண்ட் தளம் மற்றும் சுற்றுசுவர் அமைப்பது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் மேற்படி இடம் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளதால் ஏலதாரரே அதற்கு பாதுகாவலர் நியமிக்க வேண்டும் என தெரிவித்து ஏலதாரருக்கு இவ்வலுவலக ந.க.எண். 13458/2010/அ6, நாள் 27-10-2011-ன்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

[ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி, அவர்களின் ந.க.எண். 13458/2011/அ6, நாள் 24-10-2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2326	திரு. கே. ராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர், தேசிய மனித உரிமை பிரிவு, 613, நாகராஜன் நகர், ரெட்டிப்பாளையம் ரோடு, தஞ்சாவூர்.	ஈஸ்வரி நகர், ரெட்டிப்பாளையம் ரோடு, யமுனை சாலை, கங்கை சாலை, ஸ்ரீராம் நகர் ஆகிய சாலைகளை சரி செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மேற்கண்ட ஈஸ்வரி நகர் பகுதி சாலை பணியானது TOURIEF திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது. மீதமுள்ள சாலை பணியானது IUDM திட்டத்தின் கீழ் பிரேரணை அனுப்பப்பட்டு 30–11–2011ல் நகர் மன்ற ஒப்புதல் பெற்றப் பின் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்படும். [ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண். 14148/2011/ இ1, நாள் 31–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	2328	திரு. எஸ். துரைராஜ், 40, ஸ்ரீ சப்தகிரி நகர், மேலவெளி ஊராட்சி, இராமநாதபுரம் அஞ்சல், தஞ்சாவூர்–613 004.	இடிந்த விவேகானந்தர் பாலத்தை மீண்டும் அமைத்துத்தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மேலவெளி ஊராட்சி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள செந்தமிழ் நகர், பாலகிருஷ்ணா நகர், துளசி அம்மாள் நகர், வீரா நகர், மற்றும் ரமேஷ்குமார் நகருக்கு செல்லும் விவேகானந்தர் பாலம் பழுதடைந்து இடிந்து விழுந்துள்ளது. இதை நேரில் சென்று ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பாலம் கட்டுவதற்கு ரூ.3.00 இலட்சம் Wing wall மற்றும் தடுப்புச்சுவர் கட்டுவதற்கு ரூ. 2.00 இலட்சம் மொத்தம் 5.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 2011–2012ம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த நிர்ணயம் செய்யப்பட்ட வருவாய் இனத்தின்கீழ் இப்பணி மேற்கொள்ளப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தஞ்சாவூர் அவர்களின் கடித எண். 5851/2011/அ5/ நாள். 27–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	2330	திரு. மு. அருணகிரி, 1189, ஆட்டுகாரத் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.	கழிவு நீர் வாய்க்கால் சீர்செய்தல் மற்றும் சிறுபாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
விஜயமண்டப தெரு, ஆட்டுக்காரத் தெரு சேரும் இடத்தில் கழிவுநீர் வாய்க்கால் சுத்தம் செய்யப்பட்டு கழிவுநீர் தேங்காமல் கால்வாய் சுத்தமாக உள்ளது. மேற்படி சுத்தமாக பராமரிக்கப்பட்டு கால்வாய் கழிவுநீர் தேங்காமல் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள விஜயமண்டபசாலை IUDM திட்டத்தின் கீழ் சாலை மேம்பாடு செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் மேற்கண்ட சாலைப் பணியுடன் சேர்த்து சிறுபாலத்து பணியும் முடித்து தரப்படும். [ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் ந.க. எண். 13458/2011/ எச்8, நாள் 28–10–2011.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	2331	திரு. டி.டி.சந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர், திருக்கோயில்பத்து (அஞ்சல்) பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	பாபநாசம் வட்டம், திருக்கோயில்பத்து அருந்தவபுரம் அருள்மிகு வஜ்ஜிரபுரீசுவரர் திருக்கோவிலுக்கு திருப்பணி செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இத்திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து குத்தகை வசூல் செய்து வருவாயை முறைப்படுத்த இத்துறை செயல் அலுவலரை தக்காராக நியமனம் செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிக்காக ரூபாய் 38,90,000/-க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் அருள்மிகு சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி, விநாயகர் சன்னதி, சுப்பிரமணியர் சன்னதி, சண்டிகேசுவரர் சன்னதி ஆகிய திருப்பணி வேலைகள் உபயதாரர்கள் வாயிலாக நடைபெற்று வருகிறது. மேலும் மகாலட்சுமி சன்னதி, நவக்கிரஹ மண்டபம் மற்றும் மகாமண்டபம் ஆகிய திருப்பணி வேலைகளை உபயதாரர்கள் வாயிலாக செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள பணிகளுக்கு இத்திருக்கோயிலின் திருப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 38,90,000/-ல் அறநிலையத்துறை சட்டவிதிகளின்படி நான்கில் ஒரு பங்கு அரசு நிதி உதவி பெறுவதற்கு ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. [உதவி ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர் அவர்களின் கடித எண். ந.க.எண்.3926.2011/அ7, நாள் 30-10-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	2332	ஓரத்தநாடு கல்வியாளர்கள், மாணவ, மாணவியர், பொது மக்கள் தஞ்சாவூர் மாவட்டம்.	சத்திரம் நிர்வாகத்திற்குச் சொந்தமான ஓரத்தநாடு முத்தம்பாள் சத்திரத்தின் பழமையான கட்டடக் கலை, மர சிற்பங்களை பாதுகாக்கவும் அங்கு நடந்து வரும் சமுதாய சீர்கேடுகளை தடுத்திடவும் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சத்திரம் நிர்வாகத்திற்குச் சொந்தமான ஓரத்தநாடு முத்தம்பாள் சத்திரத்தில் சமுதாய சீர்கேடுகள் நடைபெற்று வருகிறது என்ற செய்தி மிகவும் தவறானது மற்றும் ஆதாரமற்றதாகும். மேற்படி சத்திரத்திற்குச் சொந்தமான கட்டடம் சத்திரம் நிர்வாகத்தால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சத்திரக் கட்டடத்தினை முழுமையாக சீரமைக்கும் பணிக்காக சிறப்பு நிதி பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. [மாவட்ட ஆட்சியர் மற்றும் சத்திரம் நிர்வாகி, தஞ்சாவூர் அவர்களின் கடித எண் ந.க. 1217/2011/சத்.எ நாள்: 16–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	2333	திரு.என். சுரேஷ், நிறுவனர் மற்றும் செயலர், ரீடு தொண்டு நிறுவனம், காருகுடி, திருவையாறு.	காருகுடியில் அபாயகரமான வளைவில் உள்ள பாலத்தை மேம்படுத்த கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள இடமானது திருவையாறு (நெ) உட்கோட்டப்பராமரிப்பில் உள்ள கல்லணை–காவேரிப்பட்டிணம் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ.34/2ல் அமைந்துள்ள குறுகிய சிறுபாலமாகும். இப்பாலத்தினை திரும்பக்கட்டுவதற்கு தோராயமாக ரூ.15.00 இலட்சங்கள் தேவைப்படும். வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் இப்பாலப்பணி ஏதாவது ஒரு திட்டத்தில் எடுத்து செய்யப்படும். இருப்பினும் பாலத்தின் இரு புறங்களிலும் விபத்தினை தடுக்கும் நோக்கத்துடன் வேகத்தடையும், அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டுள்ளது. [கோட்டப்பொறியாளர் (நெ)கம(ம) ப, தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண். 2508–2/2011.இவ அ2/நாள் 31–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	2337	திரு. எஸ்.ரகுபதி, த/பெ. சாமிநாதன், சாலைத் தெரு, ரெங்கநாதபுரம், இரும்புத்தலை, பாபநாசம் தாலுக்கா.	சாலை வசதி மற்றும் மயான வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1. மனுதாருடைய மனுவில் குறிப்பிட்டுள்ள சாலை வசதி 125 மீ. நீளத்திற்கு ரெங்கநாதபுரம் ஆதி திராவிடர் தெரு, பிளாஸ்டிக் சாலை மேம்பாடு திட்டத்தின் கீழ் பொது நிதியில் ரூ.1,80 லட்சம் மதிப்பீட்டில் 30–08–2011, 16–11–2011, தேதிகளில் டெண்டர் கோரப்பட்டது. டெண்டர் கோர எவரும் முன்வரவில்லை. 28–11–2011ல் மறு டெண்டர் கோரப்பட்டுள்ளது.	நிதி கிடைத்தவுடன், மனுதாரரின் கோரிக்கையினை விரைவில் நிறைவேற்றித் தருவதாக மெலட்டூர், பேரூராட்சி செயல் அலுவலர் உறுதி அளித்ததன் அடிப்படையில் படித்து பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது.
2. ஒருங்கிணைந்த நகர்புறவளர்ச்சி திட்டம் 20–11–2012–ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மயான மேம்பாடு பணி மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.256/2011 நாள் 28–10–2011ன்படி கருத்துரு பேரூராட்சிகள் இயக்ககத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	
நிதி கிடைக்கப்பெற்றவுடன் இப்பணி மேற்கொள்ளப்படும்.	
[செயல் அலுவலர் பேரூராட்சி அலுவலகம் மெலட்டூர் அவர்களின் கடித எண்.256/2011 27–10–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	2339	திரு. க.சேகர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தஞ்சாவூர் தெற்கு மாவட்டம், வடக்குபட்டு, மருங்குளம் அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் மருங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்திட கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மருங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணிநேர பிரசவ சேவை மையமாக இயங்கி வருகிறது. அங்கு 2 மருத்துவ அலுவலர்கள் உள்ளார்கள். மேலும் அங்கு 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு 24 மணிநேரமும் சுழற்சிமுறையில் பணியாற்றி வருகிறார்கள். இருப்பினும் ந.க.எண். 4678/2011/அ4 நாள் 15-07-2011 அன்று இவ்வலுவலகம் மூலமாக 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அமைக்க கருத்துரு இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. [துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண். 7253.2011/அ6 நாள்: 16-11-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	2341	திரு. பீ.வி. குமார், தலைவர், ஸ்ரீராம் நகர அதன் கூட்டமைப்பு நகர்கள் விரிவாக்கம் குடியிருப்போர் நல சங்கம், மாதாக்கோட்டை சாலை, நாஞ்சிக்கோட்டை (பஞ்சாயத்து), தஞ்சாவூர்.	அரியலூர் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்படுவதை மாற்றி புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அரியலூர் தடப்பேருந்துகள் 8 கி.மீ. தடம் நீட்டித்து இயக்கப்பட்டால் தற்பொழுது இயக்கப்பட்டு வரும் நடை நேரம் மாறுபடுவதுடன் அரியலூருக்கு செல்லும் நடை எண்ணிக்கை குறைவு ஏற்படும். மேலும் நகரின் மைய பகுதியில் உள்ள பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து புறப்படுவதே இப்பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். மேலும் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு போதியளவு பேருந்து இயக்கப்படுவதால் பகுதி, பகுதியாக உள்ள பேருந்து வசதியே போதுமானதாகும். [மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் அவர்களின் கடித எண்.த.அ(போக)/கும்ப/சிடி.7/த 152/2011 நாள் 29-10-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	2343	திரு. இரா. பன்னீர்செல்வம், எண்.112, 3வது தெரு, கெஜலெட்சுமி நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்.	நாஞ்சிக்கோட்டை ஊராட்சி, கெஜலெட்சுமி நகரில் தார்சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
நாஞ்சிக்கோட்டை ஊராட்சி, மனுதாரர் தெரிவித்த இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததில் கெஜலெட்சுமி நகர் 3வது மற்றும் 4வது தெரு மண் சாலையாக உள்ளது. இதன் நீளம் 440 மீட்டர். இந்த சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்ய ரூ.8,36,000/– ஆகும். இப்பணியினை வரும் நிதியாண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தம் கோரி தார் சாலைப் பணி செய்து முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.5851/2011/அ5 நாள்: 27–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	2345	திரு.என். கபாஷ் சந்திரபோஸ், 235, மெயின்ரோடு, எஸ்.புதூர், தஞ்சாவூர் மாவட்டம்.	கும்பகோணம் முதல் கொல்லுமாங்குடி வரை நகரப் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கும்பகோணம்–கொல்லுமாங்குடி தட நீளம் 34 கி.மீ. கோரிக்கை தடம். கும்பகோணம்–காரைக்கால் பிரதான தடத்தின் பகுதியாக உள்ளது. கும்பகோணம்–காரைக்கால் தடத்தில் 20 புற நகர் கழகப் பேருந்துகள் மூலம் 96 நடைகளும் 4 தனியார் பேருந்துகள் மூலம் 10 நடைகளும் இயக்கப்படுகிறது. மேற்படி 20 கழக புறநகர் பேருந்துகளும் அனைத்து நிறுத்தங்களிலும் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி செல்வதுடன் இலவச பஸ் பாஸ் பெற்ற மாணவ மாணவியர்களும் இப்பேருந்துகளை பயன் படுத்தி வருகின்றனர். மேலும் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள் நலனை கருத்தில் கொண்டு கும்பகோணம் பேரளம் வழி கொல்லுமாங்குடி காலை 2 நடை தடம் எண்.204ஜி மூலம் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. பிரதான தடத்தில் அதிகளவிலான பேருந்துகள் இயக்கப்படும் நிலையில் நகர் பேருந்து இயக்கப்பட்டால் போதிய மக்கள் பயன்பாடு இருக்க வாய்ப்பில்லை. மேலும் கும்பகோணம்–காரைக்கால் (வழி) கொல்லுமாங்குடி தடத்தில் கூடுதல் புறநகர் பேருந்து இயக்க கருத்துரு அரசு அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. அரசு அனுமதி பெறப்பட்டவுடன் இத்தடத்தில் கூடுதல் புறநகர் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [மேலாண் இயக்குனர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் அவர்களின் கடித எண்.த.அ.போக.கும்ப/சிடி7/த152/2011, நாள் 29–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	2346	திரு. ஏ.பிலிப், 7/1ஏ, மோத்திரப்பாச்சாவடி, பட்டுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்.	சோழன் ரைஸ்மில் சாலையை சீரமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தஞ்சாவூர் நகராட்சி வார்டு எண்.44 மோத்திரப்பச்சாவடி சோழன் ரைஸ்மில் சாலையினை சீரமைக்க IUDM திட்டத்தின் கீழ் பணியினை மேற்கொள்ள 30–11–2011 மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி முடிக்கப்படும். [ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண்.13460/2011/ இ3,நாள்: 01–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	2347	திரு. கோ.முருகதாஸ், மனை எண்.56, மகேஸ்வரி நகர், காட்டுத்தோட்டம், மாரியம்மன்கோவில், தஞ்சாவூர் மாவட்டம்.	மாரிம்மன்கோவில் ஊராட்சி மகேஸ்வரி நகர், மன்னையார் நகர், சரஸ்வதி நகர் ஆகியவற்றில் தெருவிளக்குகளுடன் தார்சாலை அமைத்திட கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மாரியம்மன்கோவில் ஊராட்சி மனுவில் கோரப்பட்ட நகர் புதியதாக விரிவாக்கம் செய்யப்பட்டவை. சுமார் 20 குடும்பங்கள் வசிக்கின்றார்கள். 1 அடுக்கு கருங்கல் கப்பி போடப்பட்டுள்ள தார் சாலை மேம்பாடு செய்ய ரூ.9,90,000/–ம் மதிப்பீடாகும். அனைத்து குக்கிராமங்களில் தாய் திட்டத்தின்கீழ் சர்வே பணி நடைபெற்று வருகிறது. சர்வே முடிவுற்று அரசிற்கு அறிக்கை அனுப்பி வைத்து அரசிடமிருந்து அனுமதி வரப்பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் தார்சாலை பணி மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளது. பழுதடைந்த மின் விளக்குகள் ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் சீர்செய்யப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தஞ்சாவூர், அவர்களின் கடித எண்.5851/2011/அ5 நாள்: 27–10–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

'தாய்' திட்டத்தின் கீழ் மனுதாரர் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று தஞ்சாவூர் வட்டார வளர்ச்சி அலுவலர் உறுதி அளித்ததன் அடிப்படையில் படித்து பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	2348	திரு.ஆர்.யுவராஜ், தஞ்சாவூர் மாவட்டத்தலைவர், தமிழக விவசாயிகள் சங்கம், எஸ்.புதூர், காரைக்கால் ரோடு, கும்பகோணம்.	1. கும்பகோணம்–காரைக்கால் கூடுதல் பேருந்து இயக்க கோருதல் 2. காரைக்காலிலிருந்து மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில், பழனி, திருச்செந்தூர் தொலை தூரப் பேருந்து இயக்க கோருதல். 3. கும்பகோணம்–கொல்லுமாங்குடி 2 நகரப் பேருந்து இயக்க கோருதல். 4. அணைக்கரை–கும்பகோணம் கூடுதல் பேருந்து வசதி கோருதல். 5. அணைக்கரை–கும்பகோணம் சாலையில் கல்லூரி வாயிலில் பேருந்து நின்று செல்ல கோருதல். 6. காரைக்கால்–கும்பகோணம் காலை 3 மணிக்கு பேருந்து இயக்க கோருதல்.

1. கும்பகோணம்–காரைக்கால் (வழி) திருநள்ளார் வழித்தடத்தில் தற்பொழுது 20 தடப்பேருந்துகள் மூலம் 96 நடைகள் இயக்கப்படுகிறது. கோரிக்கை தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசு அனுமதி பெற்ற பிறகு கூடுதல் பேருந்து இயக்கப்படும்.

2. காரைக்கால்–மதுரைகோயம்புத்தூர் பழனி திருச்செந்தூர் நாகர்கோயில் தொலைதூரப் பேருந்து வழித்தடம் இரு மாநில வழித் தடமாகும். தற்போதை இரு மாநில ஒப்பந்த வழித் தடத்தில் தொலைதூர பேருந்து இயக்க வழிவகை இல்லை. இருப்பினும் காரைக்கால்–கும்பகோணம் மற்றும் கும்பகோணம்–மதுரை கோயம்புத்தூர் பழநி திருச்செந்தூர் என பகுதி பகுதியாக உள்ள பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. கும்பகோணம்–காரைக்கால் தடத்தில் 20 புறநகர் கழகப் பேருந்துகள் மூலம் 96 நடைகளும் 4 தனியார் பேருந்துகள் மூலம் 10 நடைகளும் இயக்கப்படுகிறது. மேற்படி 20 கழக புறநகர் பேருந்துகளும் அனைத்து நிறுத்தங்களிலும் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி செல்வதுடன், இலவச பஸ் பாஸ் பெற்ற மாணவ, மாணவியர்களும் இப்பேருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள் நலனை கருத்தில் கொண்டு கும்பகோணம்–பேரளம் வழி கொல்லுமாங்குடி காலை 2 நடைகள் தடம் எண்.204ஜி மூலம் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. பிரதான தடத்தில் அதிகளவிலான பேருந்து இயக்கப்படும் நிலையில் நகர் பேருந்து இயக்கப்பட்டால் போதிய மக்கள் பயன்பாடு இருக்க வாய்ப்பில்லை.

4. அணைக்கரை–கும்பகோணம் வழித்தடத்தில் 12 தடப் பேருந்துகள் மூலம் 216 நடைகள் தற்பொழுது இயக்கப்பட்டு வருகிறது. மேலும் திருமணநாட்கள் மற்றும் விழா நாட்களில் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.

அணைக்கரை பாலம் பழுது பணி முடிந்து விரைவில் போக்குவரத்திற்காக பாலம் திறந்து விடப்பட உள்ளதால் விழுப்புரம், ஜெயங்கொண்டம், காட்டுமன்னார்குடி, வடலூர், சென்னை மார்க்கமாக செல்லும் அனைத்துப் பேருந்துகளும் இத்தடத்தில் இயக்கப்படும்போது அப்பேருந்தின் வசதியே போதுமானதாக இருக்கும் என்பதால், கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய தேவை இருக்காது.

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

5. கும்பகோணம்–அணைக்கரை வரை இயக்கப்படும் அனைத்து தடப் பேருந்துகளும் காலை மாலை கல்லூரி வாயிலில் நின்று மாணவ மாணவியர்களை ஏற்றி/இறக்கச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை அவ்வப்போது பரிசோதகர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

6. காரைக்கால்–கும்பகோணம் தடத்தில் தற்பொழுது காலை 4.00 மணி முதல் பேருந்து இயக்கப்படுகிறது. கூடுதல் பேருந்து இத்தடத்தில் இயக்கப்படும்போது கோரிக்கைப்படி காலை 3 மணிக்கு மக்கள் பயன்பாட்டினை ஆய்வு செய்து நடை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்(கும்பகோணம்) லிட்., கும்பகோணம் அவர்களின் கடித எண்.தஅபோகும்ப/சிடி7/தி52/2011, நாள் 29–10–2011.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	2350	திரு. சூரி சேகர், தலைவர், பீட்டர் ஞானபிரகாசம் நகர் குடியிருப்போர் நலச்சங்கம், பைபாஸ் ரவுண்டானா எண்.1 நாகை ரோடு, மாரியம்மன் கோவில் அஞ்சல், தஞ்சாவூர்.	மாரியம்மன்கோவில் ஊராட்சி எல்லைக்குட்பட்ட புளியந்தோப்பு வட்டத்தில் இடுகாடு அமைப்பது, சீர் செய்திட கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மாரியம்மன்கோவில் ஊராட்சி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புளியந்தோப்பு புன்னை நல்லூர் மாரியம்மன்கோவில் ஊராட்சி எல்லைக்குட்பட்ட (நாகை பைபாஸ் வடபுறம், தென்புறம்) நகர்வாழ் மக்கள், (ஞானம் நகர், ராஜராஜன் நகர், பொன்னுசாமி நகர்) புதுப்பட்டினம் ஊராட்சி கம்பி பாலம் சுடுகாட்டை இன்று வரை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் குடியிருப்பு நலச் சங்கம் சமுத்திர கரையில் தேவபூமி ஒத்தபனைமரம் என்ற இடத்தில் சுடுகாடு அமைக்க முன்வரும் சமயம் அந்தக் கரைவாழ் மக்கள் ஆட்சேபம் தெரிவித்ததால் மீண்டும் அவர்கள் கம்பி பாலம் சுடுகாட்டிற்கு சடலத்தை எடுத்து சுமார் 1 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலையுள்ளது. எனவே அவர்கள் சமுத்திர கரையில் தேவபூமியில் சுடுகாடு அமைக்க கோரி உள்ளார்கள். புதிதாக இடுகாடு அமைத்திட ஊராட்சி மன்றத் தலைவர் உட்பட ஊர் பிரமுகர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. கிராம மக்கள் ஒத்துழைப்புடன் சர்வே 52 எண்ணுள்ள இடத்தில் தேவபூமியில் இடுகாடு மற்றும் சுடுகாடு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.5851/ 2011/அ5 நாள்: 27–10–2011.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	2351	திரு. C.P.R. இராமனாதன், எண்.5, ஆண்டியப்பர் தெரு, கும்பகோணம்–612 001.	மிழலைநத்தம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மிழலைநத்தம் கிராமத்தைச் சுற்றி அகரத்தூர், கல்லூர், அரூர், தேவனாஞ்சேரி, சோழபுரம், அணைக்குடி, கருப்பூர், அம்மா சத்திரம், திருவிசைநல்லூர், தண்டாந்தோட்டம் ஆகிய 10 கொள்முதல் நிலையங்கள் 5 கி.மீ. தூரத்திற்குள் இயங்கி வருகின்றன. மேலும் தற்போது குறுவையில் குறைந்த அளவு நெல் வரத்து உள்ள நிலையில், சம்பாவில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். [முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.சி2/2164/2011 நாள்: 31–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	2352	திரு. ஜெயவிவேகானந்தன், புதிய தமிழகம் கட்சி, தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர், கூத்தாடி வயல், பண்ணவயல் அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம்.	கூத்தாடிவயல், பண்ணவயல், கார்காவயல் ஆகிய ஊர்களில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் திருமணமண்டபம் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1985–ம் ஆண்டு கூத்தாடிவயல் கிராமத்தில் புல எண்.23/2ல் சுமார் 36 செண்ட் இடத்தில் ஒரு சமுதாய கூடத்தினை ஆதிதிராவிடர்களுக்காக அரசு கட்டிக் கொடுத்துள்ளது. மேற்படி இடம், களமும், வண்டிப்பாதையும் புறம்போக்காகும். அக்கட்டிடம் தற்போது சிதிலமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய திருமண மண்டபம் அமைக்கும்படி மனுதாரர் கோரியுள்ளார். மனுதாரரின் கோரிக்கையை ஏற்று ஆதிதிராவிட நல ஆணையருக்கு இவ்வலுவலக ந.க.455410/ம3 நாள் 04–11–2011–ல் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. ஆணை பெற்று தாட்கோ மூலம் புதிய சமுதாயக் கூடம் கட்டிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. [மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.ந.க.455410/ம3 நாள் 04–11–2011.]	மனுதாரரின் கோரிக்கையினை "தாட்கோ" திட்டம் மூலம் நிறைவேற்றுவதாக மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தெரிவித்துள்ளதால் இது படித்துப் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும்,	மனுவின் சுருக்கம் முகவரியும்.
(1)	(2)	(3)	(4)
22	2353	மலர் நகர் அனைத்து குடியிருப்போர் நலச் சங்கம், பிளாட் எண்.8, மலர் நகர் விரிவாக்கம், தாராகரம்–612 702.	அடிப்படை வசதியான சாலை, குடிநீர் வசதிகள் செய்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தில் மலர் நகர் விரிவாக்கப்பகுதிக்கு ரூ.34,000/– மதிப்பீட்டில் குடிநீர் குழாய் பாதைகள் அமைக்கப்பட்டு நான்கு இடங்களில் பொது குடிநீர் குழாய் நிறுவப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தாராசுரம் பேரூராட்சிக்கு தனிகுடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.8.96 இலட்சம் ஆய்வு கட்டணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
மலர் நகர் மற்றும் மலர் நகர் விரிவாக்கப்பகுதியில் உள்ள 760 மீ மண் சாலைகளை ஒருங்கிணைந்த நகர்புறவளர்ச்சி திட்டம் 2011–12ன் கீழ் விரிவான திட்ட அறிக்கை ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் திட்டப்பணி செயல்படுத்தப்படும்.	
[செயல் அலுவலர், தாராசுரம் பேரூராட்சி அவர்களின் கடித எண்.235/2011/ அ1 நாள்: 28–10–2011.]	

வரிசை எண்.	மனு எண் முகவரியும்.	மனுதாரரின் பெயரும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
23	2354	திரு. அ. ராம்மோகன், 631, சன்னதி தெரு, மாத்தூர் கிழக்கு, தஞ்சாவூர் மாவட்டம்.	மாத்தூர் கிழக்கு ஊராட்சி ஒத்தை வீடு கிராமத்திற்கும், மாத்தூருக்கும் இடையில் செல்லும் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே நடைபாலம் அமைத்துத் தர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் கிழக்கு ஊராட்சியில் மனுதாரர், தெரிவித்துள்ள இடத்தில் குடமுருட்டி ஆற்றின் வடக்குக் கரையில் ஒத்தை வீடு கிராமம் உள்ளது. பாலம் கட்ட கோரும் இடம் குடமுருட்டி ஆறு அங்குள்ள நீர் வழி பாதை 210 மீட்டர் நீளம் உள்ளது. ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் (Ref No CRD & PR Circular No.81058/2009/TUS dated Approved the Committee date 23-04-2010) கடிதப்படி 60 மீட்டர் நீளம் வரைதான் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பாலம் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தஞ்சாவூர் அவர்கள் வழியாக அரசுக்கு அறிக்கை அனுப்பி அரசிடமிருந்து அனுமதி வரப்பெற்றவுடன் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.5851/2011/அ5 நாள்: 27-10-2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
24	2355	திரு. வரகூர் க. மாரிமுத்து அவர்கள் மக்கள் நல ஆர்வலர், த/பெ. க.கந்தன் கொடும்புரார், 2022, சோவைகாரன் தெரு, கரந்தை அஞ்சல், தஞ்சாவூர் -613 002.	திருவையாறு தாலுக்கா வரகூர் ஊராட்சி அய்யனாகோடி வாய்க்காலை தூர்வாரித் தரக் கோருதல்.

துறையின் இறுதி அறிக்கை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தற்பொழுது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு பாசனத்திற்கு நீர் பங்கீடு செய்யப்பட்டு வருவதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது ஆணையின்படி வருகின்ற ஜனவரி மாதத்தில் அரசின் அனுமதி பெற்று, மேட்டூர் அணை மூடப்பட்ட உடன் ஆக்ரமிப்புகளை அகற்றி தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [செயற்பொறியாளர், பொது.நீ.ஆ.அ, வெண்ணாறு வடிநில கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.282M/கோ.205/2011/உவ நாள்: 05–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
25	2356	திரு. வரகூர் க. மாரிமுத்து அவர்கள் மக்கள் நல ஆர்வலர், த/பெ. க.கந்தன் கொடும்புரார், 2022, சேர்வைகாரன் தெரு, கரந்தை அஞ்சல், தஞ்சாவூர்–613 002.	திருவையாறு தாலுக்கா வரகூர் ஊராட்சி பீ வாய்க்காலை தூர்வாரித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தற்பொழுது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு பாசனத்திற்கு நீர் பங்கீடு செய்யப்பட்டு வருவதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது ஆணையின்படி வருகின்ற ஜனவரி மாதத்தில் அரசின் அனுமதி பெற்று, மேட்டூர் அணை மூடப்பட்ட உடன் ஆக்ரமிப்புகளை அகற்றி தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [செயற்பொறியாளர், பொது.நீ.ஆ.அ, வெண்ணாறு வடிநில கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கடித எண்.282M/கோ.205/2011/உவ நாள்: 05–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	2357	தியாகி திரு. கா. மூக்கையன் செட்டியார், வெள்ளாம்பெரம்பூர் அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.	காந்திஜி சாலை புது ஆற்று பாலம் அருகில் கட்டண கழிவறை, குளியலறை கட்டித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இந்நகராட்சிக்குட்பட்ட புது ஆற்றுப்பாலம் காந்திஜி சாலையில் கட்டண கழிவறை மற்றும் குளியல் அறை அமைக்க ரூ.3.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன் வராததால் தற்போது புதிய மதிப்பீடு தயார் செய்து, வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து செய்யப்படும். [ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண்.13461/2011/இ1 நாள்: 04-10-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
27	2358	தியாகி. திரு. கா. மூக்கையன் செட்டியார், தலைவர் விவசாயிகள் நல சங்கம், வெள்ளாம்பெரம்பூர்.	வெள்ளாம்பெரம்பூர் பிள்ளை வாயிக்கால் தென்கரையில் சாலை மேம்பாடு செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
வெள்ளாம்பெரம்பூர் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளை வாய்க்கால் தென்கரையில் சாலையின் மொத்த நீளம் 3450மீ உள்ளது. அதில் 2500மீ ஓரடுக்கு கப்பி போடப்பட்டுள்ளது. மீதம் 950 மீட்டர் மண் சாலையாக உள்ளது. மேலும், சாலையின் அகலம் 3.50மீ உள்ளது. இந்த சாலையை ஓரடுக்கு கருங்கல் ஜல்லி சாலையாகவும் மீதமுள்ள சாலை 950மீ தார்ச்சாலையாக அமைக்கவும் தோராயமாக ரூ.34.50 இலட்சம் தேவைப்படுவதால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும்போது இப்பணி தேர்வு செய்து சிறப்பினமாக கருதி எடுத்துச் செய்யப்படும். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திருவையாறு, அவர்களின் கடித எண் ந.க.எண்.5661/2011/அ5, நாள்: 25–10–2011.]	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
28	2359	திரு. வி.எஸ். சண்முகவேல், வாளமர்க்கோட்டை அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.	கலைக்கப்பட்ட டி.1711 வாளமர்க்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை மீண்டும் செயல்பட ஆவன செய்ய கோருதல்.

		துறையின் பரிந்துரை.	குழுவின் குறிப்புரை.
		(5)	(6)
		கலைக்கப்பட்ட வாளமர்க்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை மீண்டும் செயல்பட வைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இச்சங்க விவகார எல்லையில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான பயிர்க்கடன் மற்றும் உரம் மருங்கை மற்றும் சூரக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 107 நபர்களுக்கு ரூ.58.28 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. [துணைப்பதிவாளர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் எண் ந.க.2513/2011/ பும் நாள் 20–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
29	2360	திரு. உ. ஜோசப், 419, புஸ்பம் காலனி 2ம் தெரு, அருளானந்த நகர் 10வது தெரு, வ.உ.சி. நகர், தஞ்சாவூர்.	புஸ்பம் காலனி 2ம் தெருவில் சாலை மேம்பாடு செய்திட கோருதல்.

	துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
	(5)	(6)
	தஞ்சாவூர் நகராட்சி வார்டு எண்.42 புஸ்பம் காலனி 2ம் தெரு சாலையானது IUDM திட்டத்தின் கீழ் பணி தேர்வு செய்யப்பட்டு 30–11–2011 அன்று மன்றக் கூட்டத்தில் மன்றப் பொருள் வைக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி முடித்து கொடுக்கப்படும். [ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க 13402/2011/ இ3, நாள் 01–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
30	2362	திரு. ப. பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர், 1/216, செருவாவிடுதி, தெற்கு அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலத்தை மையமாக கொண்டு 108 ஆம்புலன்ஸ் சேவை கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 108 ஆம்புலன்ஸ் ஒன்றும், பட்டுக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து 108 ஆம்புலன்ஸ் ஒன்றும் சேவையாற்றி வருகின்றன. குருவிக்கரம்பையில் இருந்த திருச்சிற்றம்பலம் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலும், பட்டுக்கோட்டையிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. தற்போது இவ்விரு இடங்களிலும் சேவையாற்றி வரும் 108 ஆம்புலன்ஸ்களை பயன்படுத்திக்கொள்ள மனுதாரர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும் மனுதாரரின் கோரிக்கை தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநருக்கு ந.க.எண்.8827/தி.வ./2011 நாள்: 2–11–2011–ன்படி பரிந்துரைக்கப்பட்டுள்ளது [இணை இயக்குநர் நலப்பணிகள், தஞ்சாவூர் (இ) கும்பகோணம் ந.க.எண்.8827/தி.வ./2011, நாள் 2–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
31	2364	விவசாயிகள், கோவில்பத்து, கிராமம்,	ஆனந்த காவேரி ஆற்றில் வடகரையில் தார்சாலை அமைத்தல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
2009–2010–ம் ஆண்டில் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஊராட்சி நிதி பெறப்பட்டு ஆனந்த காவேரி ஆற்றில் வடகரையில் குடியிருப்பு பகுதி வரை தார்ச்சாலை அமைக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 1 கி.மீ. தூரம் மண் சாலையாக உள்ளது. இச்சாலையினை தார் சாலையாக மாற்றி அமைக்க ரூ.12.00 லட்சம் நிதி தேவைப்படுகிறது. இச்சாலை விவசாய பொருட்களை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட உள்ளது. ஒன்றியகுழு கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் இயற்றப்பட்டு ஒன்றிய பொது நிதியிலிருந்து இப்பணி செய்து முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ.) பூதலூர், அவர்களின் கடித எண். 3101/2011/அ6 நாள்:28–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
32	2366	திரு. எஸ். பூமிநாதன், 1/69, கீழத்தெரு தத்துவாஞ்சேரி, சிதம்பரநாதபுரம்.	உக்கரை ஊராட்சி பரிசலாறு சுடுகாடு மண்பாதையை தார்சாலையாக மாற்றித் தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உக்கரை ஊராட்சி பரிசலாற்றிலிருந்து வடபாதி சுடுகாடு வரையிலும் உள்ள மண் சாலையை தார் சாலையாக மாற்றித்தர கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையை 3 மீட்டர் அகலம் மற்றும் 900 மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலையாக மாற்ற தோராய மதிப்பீடு ரூபாய் 11.50 லட்சம் ஆகும். இப்பணியை ஒன்றியப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஒன்றியக் குழுக்கூட்டத்தில் கூட்டப்பொருள் சேர்க்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருப்பனந்தாள் அவர்களின் கடித எண். ந.க.220/2011/அ2 நாள்: 28–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
33	2367	திரு. சா. பூமிநாதன், 1/69, கீழத்தெரு, தத்துவாஞ்சேரி அஞ்சல், திருவிடைமருதூர் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் குறிச்சி கிராமம் மண்ணியார் மைல் 68.0/ல் அமைந்துள்ள கொண்டையான் படுக்கை அணை சீரமைத்திட கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் குறிச்சி கிராமம் மண்ணியார் மைல் 68.0/ல் அமைந்துள்ள கொண்டையான் படுக்கை அணை மூலம் மேலராமன் வாய்க்கால் மற்றும் கொண்டையான் வாய்க்கால் பாசன வசதி பெற்று வந்தன. தற்போது இப்படுக்கையணை மிகவும் சேதமடைந்து போதுமான அளவு நீரை தேக்கி மேற்குறிப்பிட்ட பாசன வாய்க்கால்களுக்கு தேவையான அளவு பாசன நீர்வழங்க இயலாத நிலை உள்ளது. இப்படுக்கை அணை தற்போது சீர்செய்திட இயலாத நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட வாய்க்கால்களில் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் வழங்கிட புதிய படுக்கை அணை கட்டுவது அவசியமாகும்.

எனவே மேற்கண்ட வாய்க்கால்களுக்கு தேவையான பாசன நீர் வழங்கிட குறிச்சி கிராமம் மண்ணியாற்றின் குறுக்கே மைல் 68.6ல் படுக்கை அணை கட்டுவதற்கு அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு ஏதுவாக மதிப்பீடு ரூ.45.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் பொது/நீ.ஆ.அ., கீழ் காவேரி வடிநிலை வட்டம் தஞ்சாவூர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண் 359 எம் கோ.14 வ.1. நாள்: 31–10–2011ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

[செயற்பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ., காவேரி வடிநில கோட்டம், தஞ்சாவூர், அவர்களின் கடித எண். 362, எம். கோ.14 வ.1. நாள்: 31–10–2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
34	2368	திரு. சா. பூமிநாதன், 1/69, கீழத்தெரு, தத்துவாஞ்சேரி அஞ்சல், திருவிடைமருதூர் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.	ஆழியான் வாய்க்கால் தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள ஆழியான் வாய்க்கால் மண்ணியார் மைல் 65.7/ல் கூத்தனூர் கிராமத்தில் பிரிந்து 2.80 கி.மீ.தூரம் கடந்து 226 ஏக்கர் விளை நிலங்களுக்கு பாசன வசதி அளித்து பின்னர் முள்ளங்குடி வாய்க்காலில் கலக்கிறது. தற்போது ஆழியன் வாய்க்கால் தூர்வாரப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இதனை தூர்வார ரூ.2.00 இலட்சம் தேவைப்படும். மேலும் தற்போது வாய்க்காலில் தண்ணீர் சென்று கொண்டிருப்பதால் வாய்க்கால் தூர்வார இயலாத சூழ்நிலை உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து ஜனவரி 28/ம் தேதி தண்ணீர் நின்றபின் மார்ச் 2012/ம் ஆண்டு ஆழியான் வாய்க்கால் தூர்வாரித் தரப்படும். [செயற்பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ., காவேரி வடிநில கோட்டம், தஞ்சாவூர், அவர்களின் கடித எண். 351, எம். கோ.14 வ.1. நாள்: 21–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
35	2373	திரு.ச. முருகேசன், 101, சின்னகட்டாநகரம், திருப்பனந்தாள் அஞ்சல், திருவிடைமருதூர் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம் மானங்காத்தான் வாய்க்கால் மண்ணியாறு வலது கரை மைல் 65/2/3ல் பிரியும் மானங்காத்தான் வாய்க்கால் பாசனத்திற்காக ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட சாய்வணை மழை வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளது. வாய்க்கால் தலைப்பில் ஆற்றின் குறுக்கே சாய்வணை அமைத்திட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மானங்காத்தான் வாய்க்கால் மண்ணியாறு வலது கரை மைல் 65/2/3ல் பிரிந்து 4500 மீட்டர் தூரம் கடந்து 338 ஏக்கர் விளை நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் வாய்க்காலாகும். இவ்வாய்க்காலுக்கு மண்ணியாறு 67.2/ல் அமைந்துள்ள திருப்பனந்தாள் நீரொழுங்கியின் மூலம் பாசன வசதி அளிக்கப்பட்டு வருகிறது. திருப்பனந்தாள் நீரோழுங்கிக்கும் மானங்காத்தான் வாய்க்கால் தலைப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 2 மைல் ஆகும். மேலும் மானங்காத்தான் வாய்க்கால் தலைப்பு அமைந்துள்ள இடத்தில் மண்ணியாற்றின் இயல்பு மட்ட அளவைவிட 3 அடி அளவிற்கு அரிமானம் ஏற்பட்டுள்ளது. இதனால் மானங்காத்தான் வாய்க்காலுக்கு உரிய அளவு பாசன நீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட வாய்க்காலுக்கு பாசன வசதி அளிக்க ஏதுவாக மண்ணியாற்றின் குறுக்கே 65/2-3-ல் படுக்கை அணை அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, மண்ணியாற்றின் குறுக்கே மைல் 65/2-3ல் படுக்கை அணை கட்டுவதற்கு அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு ஏதுவாக மதிப்பீடு ரூ. 50.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் பொபது/நீ.ஆ.அ. கீழ் காவேரி வடிநில வட்டம் தஞ்சாவூர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண் 360 எம். கோ.14. வ.1 நாள்:31-10-2011ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. [செயற்பொறியாளர், பொ.ப.து.நீ.ஆ.அ., காவேரி வடிநில கோட்டம், தஞ்சாவூர், அவர்களின் கடித எண். 363, எம். கோ.14 வ.1. நாள்: 31-10-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
36	2374	திரு. அ. நூர்முகமது, கோரிக்கொல்லை மேலத்தெரு, பட்டுக்கோட்டை–614 601.	பட்டுக்கோட்டை வட்டம் மகாராஜசமுத்திரம் கிராமம் புலஎண். 178, பகுதி பரப்பளவு 18.7 ஏக்கரில் குளம் 6.23 ஏக்கர் அரசு புறம்போக்கில் உள்ளது. ஆக்ரமிப்புகளை அகற்றவும், மீன்பாசி குத்தகை விடவும், கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மகாராஜசமுத்திரம் கிராமம் புல எண். 178, பகுதி நகரளவில் வார்டு ஏ பிளாக் 40 நகர புல எண். 44/178 பகுதி சர்க்கார் புறம்போக்கு 2.5463 ஹெக்டேர் அல்லது 6 ஏக்கர் 23 சென்ட் பரப்பளவில் குளம் உள்ளது. மேற்படி குளத்தில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்ற நகர சார் ஆய்வாளர் மூலம் அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மீன்பாசி குத்தகை ஏலத்தில் விட நகர்மன்றத்தில் அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளது. [பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 6388/2011/எப் 1., நாள்:31–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
37	2376	திரு. டி. சரவணபவன் மற்றும் கிராம பொதுமக்கள் துலுக்கவிடுதி, ஆவணம் (அஞ்சல்) போராவூரணி (வட்டம்), தஞ்சாவூர் மாவட்டம்.	துலுக்கவிடுதி தெற்கு கிராமத்தில் உள்ள நேதாஜி சாலை மற்றும் காந்திஜி சாலை ஆகிய சாலைகளை தார்ச்சாலையாக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள மெட்டல் சாலையினை ரூ. 6.65 லட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலையாக மாற்றம் செய்திட கருத்துரு ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சி), தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் ஒன்றிய பொது நிதியிலிருந்து பணி செய்து முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் கடித எண் 190/2011/அ4, 11–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
38	2378	திரு. சோம. இராமமூர்த்தி, 20, காமாட்சி அம்மன்தெரு, மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.	மழைநீர் வடிகால் ஆக்கிரமிப்புகளை அகற்றி மழைநீர் சீராக செல்ல நடவடிக்கை எடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு சுந்தரம் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால் வசதி அமைத்து கொடுக்கும் பொருட்டு, இந்நகரளவு ஆவணங்களின் அடிப்படையிலும் தற்பொழுது நிலையில் உள்ள வடிகால் குறித்து நகராசார் ஆய்வர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் மருத்துவக்கல்லூரி சாலைக்கு வடக்கில் அமைந்துள்ள நவபாரத் மெட்ரிக் பள்ளியின் எதிரே அமைந்துள்ள வடிகால் வாரியானது சுந்தரம்நகர் பகுதி வழியாக சென்று பாண்டியன் நகர் வரையிலும் செல்வதற்கு நகரளவு ஆவணங்களின்படி வழிவகை உள்ளது. மேற்படி வாரியானது பல ஆண்டுகளுக்கு முன்பு பாண்டியன்நகர் பிரதான சாலையில் நிலையில் உள்ள சிறுபாலம் வழியாக தனியாருக்குச் சொந்தமான யானைக்குளத்தில் மழைநீர் வடியும் வகையில் இருந்துள்ளது. ஆனால் தற்பொழுது மேற்படி குளமானது முழுவதும் தூர்க்கப்பட்டு மனைப்பிரிவுகளாக மாற்றம் செய்யப்பட்டு குடியிருப்புகள் கட்டப்பட்டுவிட்டன. எனவே, பாண்டியன்நகர் பகுதியில் புதிய மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்தி நிலையிலுள்ள ஆல்வின் பள்ளியின் மேற்புறத்தில் உள்ள வாரியின் வழியாக இரயில்வே பாதை அருகில் அமைந்துள்ள சிறுபாலம் வரை மழைநீர் செல்ல வழி உள்ளது. பாண்டியன் நகர் பிரதான சாலையில் புதிய வடிகால் 200 மீட்டர் நீளத்திற்கும் தூர்வாரி மேம்பாடு செய்வதற்கும் தேவையான ரூ. 3.60 மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

[ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண்.15221/ 2010/எப்1 மற்றும் 14615 நாள்: 05–10–2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
39	2379	திரு. இரா. மதியழகன், த.பெ. ராஜகோபால், கொவல்லுண்டாம்பட்டு, நாஞ்சிக்கோட்டை அஞ்சல், தஞ்சாவூர்–6.	கொவல்லுண்டாம்பட்டு கிராமம் அரிஜன தெருவில் வீட்டுமனை குறுக்கே கேபிள் மூலமாக செல்லும் மின் கம்பியை மாற்ற கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
கொவல்லுண்டாம்பட்டு அரிஜன தெருவில் குறைந்த அழுத்த குறைபாடு ஏதும் கண்டறியப்படவில்லை. கொவல்லுண்டாம்பட்டு கிராமம் அரிஜன தெருவில் வசிக்கும் ராஜகோபால் மனைவி ஜெகஜோதி என்பவரது வீட்டுமனையின் குறுக்கே செல்லும் மின் பாதையை மாற்றி அமைக்க DCW திட்டத்தின்கீழ் மதிப்பீட்டுத் தொகையை செலுத்த சம்மதித்து விண்ணப்பித்து மதிப்பீட்டுத் தொகை செலுத்தினால் மட்டுமே மாற்றி அமைக்க இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

[மேற்பார்வை பொறியாளர், தமிபவ/தஞ்சாவூர், கடித எண். மேபொ/தமிபவ/தஞ்/உசெபொ/வளர்ச்சி/ கோ. சட்டமன்ற பேரவை மனுக்கள்/ எண் 577/11 நாள்:12–10–2011.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
40	2380	திரு. குஞ்சிதபாதம், எம்.ஏ., தலைவர், சுந்தரம் நகர் மக்கள் நல மன்றம், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.	37வது வார்டு பகுதி சுந்தரம் நகர் குடியிருப்பில் மழைநீர் வடிகால் ஆக்கிரமிப்புகளை அகற்றி, மழைநீர் சீராக செல்ல நடவடிக்கை எடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு சுந்தரம் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால் வசதி அமைத்து கொடுக்கும் பொருட்டு, இந்நகராளவு ஆவணங்களின் அடிப்படையிலும் தற்பொழுது நிலையில் உள்ள வடிகால் குறித்து நகரசார் ஆய்வர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் மருத்துவக்கல்லூரி சாலைக்கு வடக்கில் அமைந்துள்ள நவாரத் மெட்ரிக் பள்ளியின் எதிரே அமைந்துள்ள வடிகால் வாரியானது சுந்தரம் நகர் பகுதி வழியாக சென்று பாண்டியன் நகர் வரையிலும் செல்வதற்கு நகராளவு ஆவணங்களின்படி வழிவகை உள்ளது. மேற்படி வாரியானது பல ஆண்டுகளுக்கு முன்பு பாண்டியன் நகர் பிரதான சாலையில் நிலையில் உள்ள சிறுபாலம் வழியாக தனியாருக்குச் சொந்தமான யானைக்குளத்தில் மழைநீர் வடியும் வகையில் இருந்துள்ளது. ஆனால் தற்பொழுது மேற்படி குளமானது முழுவதும் தூர்க்கப்பட்டு மனைப்பிரிவுகளாக மாற்றம் செய்யப்பட்டு குடியிருப்புகள் கட்டப்பட்டுவிட்டன. எனவே பாண்டியன்நகர் பகுதியில் புதிய மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்தி நிலையிலுள்ள ஆல்வின் பள்ளியின் மேற்புறத்தில் உள்ள வாரியின் வழியாக இரயில்வே பாதை அருகில் அமைந்துள்ள சிறுபாலம் வரை மழைநீர் செல்ல வழி உள்ளது. பாண்டியன் நகர் பிரதான சாலையில் புதிய வடிகால் 200 மீட்டர் நீளத்திற்கும் தூர்வாரி மேம்பாடு செய்வதற்கும் தேவையான ரூ. 3.60 மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

[ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண். 15221/ 2010/எப்1 மற்றும் 14615 நாள் 5–10–2011.]

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
41	2384	திரு. ஆர். கலியமூர்த்தி, 35/28 மேலவீதி, திருப்பனந்தாள்.	திருப்பனந்தாள் – ஆடுதுறை சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள திருப்பனந்தாள் – ஆடுதுறை சாலை கி.மீ. 0/2 – 10/4, திருவிடைமருதூர் (நெ) உட்கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/2, – 1/0 வரை 2008லும், கி.மீ. 5/6–6/9, 7/2–8/2 வரை 2007லும், கி.மீ.8/4– 9/0 வரை 2008லும் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதியான கி.மீ. 1/0–2/0, 2/0–3/0, 3/0–4/0, 4/0–5/0, 5/0–5/6 மற்றும் 6/9–7/2, 9/0–10/0, 10/0–10/4 வரை மேம்பாடு செய்ய கூடுதல் தொகை ரூ. 313.00 இலட்சத்திற்கு ஒருங்கிணைந்த சாலை மேம்பாடு திட்டம் 2011–12க்கு அரசாணை எண் 119/ நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை (HN2) நாள் 24–10–2011 கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 24–11–2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பணிகள் அனைத்தும் இந்த நிதி ஆண்டிற்குள் முடிக்கப்படும். [கோட்டப்பொறியாளர் (நெ) க (ம) ப, தஞ்சாவூர், அவர்களின் கடித எண். ந.க. 2508–3/2011/இவ.அ2/ நாள்: 31–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
42	2385	திரு. ஆர். பஞ்சாபிகேசன், நாயக்கான்கோட்டை, காட்டுர் அஞ்சல், தஞ்சை வட்டம்.	காட்டுர் ஊராட்சியை சேர்ந்த நாய்க்கான் கோட்டை கிராமத்திற்கு தென்புறம் வழியாகச்செல்லும் கல்யான ஓடை கால்வாய் பழுதடைந்துள்ளது. சீர் செய்திட கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

காட்டுர் ஊராட்சி மனுதாரர் தெரிவித்த கால்வாய் பாலம் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. பாலம் 1927ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் நீளம் 27மீ அகலம் 3.50 மீ. பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் வலுவிழந்து உள்ளது. இந்தப்பாலம் கட்ட தோராயமாக ரூ. 35,00,000/–மும் புறவழிச்சாலை அமைக்க ரூ.10.00 இலட்சமும் தேவைப்படுகிறது. பாலம் மற்றும் புறவழிச்சாலை பணியினை 20–11–2012ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நிர்ணயம் செய்யப்பட்ட வருவாய் இனத்தின் (PAR) கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), தஞ்சாவூர் அவர்களின் கடித எண் 5851/ 2011/அ5/ நாள்: 27–10–2011.]

குழுவின் பதிலுரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
43	2386	திரு. வே. சின்னதம்பி, முனுமாகாடு குருவிக்கரம்பை அஞ்சல், பேராவூரணி தாலுக்கா.	பேராவூரணி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சொந்த இடம் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சொந்தமாக இடம் அருள்மிகு. ஆத்தாளூர் வீரமாகாளியம்மன் திருக்கோவிலுக்குச் சொந்தமானதும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான 2.91 ஏக்கர் நிலத்தினை விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளவும், வருவாய்துறை மூலம் நில மதிப்பு பெற்றிடவும், நில மதிப்பு பெற்றதும் ஆணையர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சென்னை அவர்கள் மூலம் அரசிடம் அனுமதி பெற்று நிலம் வாங்கப்படும். மேலும் தஞ்சாவூர் விற்பனைக்குழுவில் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ளது.

[செயலாளர், தஞ்சாவூர் விற்பனைக்குழு, தஞ்சாவூர் அவர்களின் கடித எண் ஆ1/4536/2011 நாள்: 18–10–2011.]

குழுவின் பதிலுரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
44	2387	திரு.க. செந்தில்முருகன், விங்ஸ் சமூக ஆய்வகம், 36, புஷ்ப மண்டபத்தெரு, திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்–613 204.	தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு நகரில் போக்குவரத்து நெருக்கடியை சரிசெய்து, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பதிலுரை
(5)	(6)
திருவையாறு கடைவீதியில் சாலைகள் குறுகலாக உள்ளது. மேலும் அணைக்கரை பாலம் பழுதடைந்துள்ளதால் சென்னை செல்லும் வாகனங்களில் பெரும்பாலானவை இவ்வழியாகவே செல்கின்றன. திருவையாறு, பழமையான மற்றும் சிறப்பு வாய்ந்த தலமாக இருப்பதால் சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகின்றனர். மேலும் அரியலூர் சிமெண்ட் ஆலைகளிலிருந்து சரக்கு வாகனங்கள் மற்றும் மணல் குவாரியிலிருந்து வரும் மணல் லாரிகள் இவ்வழியாக அதிகமாகச் செல்கின்றன. சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் வாகனங்கள், காலை மற்றும் மாலை நேரங்களில் அதிகமாக வருவதால் இங்கு நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. இருப்பினும் திருவையாறு காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் அனுப்பப்பட்டு, காலை மாலை மற்றும் எல்லா நேரங்களிலும் சாலையில் போக்குவரத்து சரிசெய்யப்படுகிறது. [காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் அவர்களின் கடித எண் 40148/ஜி3/2011 நாள்: 28–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
45	2388	திரு. து. பழனியப்பன், கள்ளப்பெரம்பூர் அஞ்சல், ஆலங்குடி வழி, தஞ்சாவூர் வட்டம்.	கள்ளப்பெரம்பூர், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயிலை புதுப்பிக்கக் கொடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் இசைவுரை பதிலுரை
(5)	(6)
மேற்படி திருக்கோயில் திருப்பணி செய்ய போதுமான நிதிவசதி இல்லாததாலும் உபயதாரர்கள் எவரும் திருப்பணி செய்ய முன்வராத நிலையில் திருப்பணி செய்ய இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் மேற்படி திருக்கோயில் 13–வது நிதி ஆணையத்தில் 2014–2015 ஆண்டில் திருப்பணி வேலைகள் செய்ய ரூ.25 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி உதவியினை பெற்று திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளப்படும். [இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின் கடித எண் ந.க. 15395/2011/ஆ1 நாள்: 11–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
46	2394	வி. சிவசுப்பிரமணியன், தலைவர், எண் 4, ராஜராஜன் நகர் 3ம் தெரு, தஞ்சாவூர்.	கழிவு நீர் திறந்த வெளியில் உள்ள வாய்க்காலில் கலப்பதை தடுக்கக் கோருதல்.

		துறையின் பதிலுரை	குழுவின் பதிலுரை
		(5)	(6)
		மேற்கண்ட மனுவில் குறிப்பிட்டுள்ள ஆர்.எம்.எஸ். நகர் சேகர் காலனி தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி இல்லை. மேற்கண்ட இடம் நாஞ்சிக்கோட்டை பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியாகும். மேற்கண்ட காலனியில் இருந்து வெளியேறும் மலம் மற்றும் கழிவு நீர் சேரும் இடம் உள்ள வாய்க்கால் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே மேற்கண்ட கால்வாயை தூர் வாரவும், சுத்தம் செய்யவும் ஊராட்சி மன்றத் தலைவர், நாஞ்சிக்கோட்டைக்கு அனுப்பி மேல் நடவடிக்கை தொடர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
		[ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் கடித ந.க. எண் 13466/2011/ எச்8/ நாள்: 16–11–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
47	2395	திரு. புரட்சி கருப்பையா, சின்னக்கோட்டைக்காடு, வெங்கரை.	சாலை சீரமைக்க கோருதல்.

	துறையின் பதிலுரை	குழுவின் பதிலுரை
	(5)	(6)
	மேல கோட்டைக்காடு முதல் வாட்டாத்திக்கொல்லைக்காடு முடிய சாலை சீரமைக்க கோரியவாறு சாலை பார்க்கப்பட்டது. இதன் நீளம் 2 கி.மீ. அகலம் 3 மீட்டர் மூன்று சிறு பாலங்கள் பழுது நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. இதன் உத்தேச மதிப்பு ரூ. 30.00 இலட்சம் ஆகும். எதிர்வரும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமை அடிப்படையில் பணி முடிக்கப்படும்.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
	[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவோணம், அவர்களின் கடித எண் 3666/2011/அ3/நாள்: 27–10–2011.]	


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்கள் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	2322	திரு. இரா. கோவிந்தராசன், 26, கொடிக்காலூர் பழைய தெரு, கரந்தட்டாங்குடி அஞ்சல், தஞ்சாவூர்–613 002.	தஞ்சாவூர் நகராட்சி கொடிக்காலூர் பழைய தெரு பக்கத்தில் உள்ள புறவழிச்சாலையில் மின் விளக்கு வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் மின் கம்பமோ மின் பாதையோ இல்லை, அவ்விடத்தில் தெருவிளக்கு அமைக்க ஆணையர் தஞ்சாவூர் நகராட்சி அவர்களின் விண்ணப்பத்தின்படி மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளது. 23–11–2011க்குள் மின்கம்பம் அமைத்து தரப்படும்.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

[மேற்பார்வை பொறியாளர், தமிபவ., தஞ்சாவூர் அவர்களின் கடித எண் மே.பொ/தமிபவ/தஞ்/உ.செபொ/வளர்ச்சி/முநிவ/கோ/சட்டமன்ற பேரவை மனுக்கள் எண். 578/11 நாள்: 12–10–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	2327	திரு. எஸ். சுப்ரமணியன், 15,16, செந்தமிழ் நகர் விரிவாக்கம், இராமநாதபுரம் அஞ்சல், தஞ்சாவூர்– 613 004.	தெருக்களில் மின் விளக்கு அமைத்துதரக்கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேலவெளி ஊராட்சியிலுள்ள ஸ்ரீ செந்தமிழ் நகர் விரிவாக்கப்பகுதி தெருக்களில் மொத்தம் 8 மின் கம்பங்கள் உள்ளன. வீடுகளுக்கு மட்டும் மின் கம்பங்களிலிருந்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு அமைத்துதரக் தோராயமாக ரூ. 50,000/– மதிப்பீடு ஆகும் என மின்வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் வாரியத்திற்கு மதிப்பீடு கோரி ஊராட்சி மூலம் விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு வரப்பெற்றவுடன் ஊராட்சி நிதியிலிருந்து தொகை செலுத்தி இணைப்பு பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [மாவட்டார வளர்ச்சி, அலுவலர் (வ.ஊ), தஞ்சாவூர் அவர்களின் கடித எண் 5851/2011/அ5/ நாள்: 27–10–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	2336	திரு. ஜெ. தங்கராசு, ஊரணிபுரம் அஞ்சல், ஓரத்தநாடு வட்டம்.	ஊரணிபுரம் சந்தைத் திடலில் வணிகவளாகம் கட்டித்தரக்கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சி, ஊரணிபுரம் சந்தை திடலின் அருகில் புதிய சந்தை கட்டிடம் கட்ட இடவசதி உள்ளது. இதன் சர்வே எண் 183.2 பரப்பளவு 22 ஏர்ஸ் ஆகும். எதிர்வரும் 20–11–2012ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று இப்பணியினை மேற்கொள்ளப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவோணம் அவர்களின் கடித ந. எண். 3666/2011/அ3/ நாள் : 27–10–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2340	திரு. ஆர். கணேசமூர்த்தி, உறுப்பினர் ஐந்தாவது தூண் (தன்னார்வ அமைப்பு) மற்றும் கிராமவாசிகள் கோவிந்தபுரம் கிராமம் மற்றும் அஞ்சல் திருவிடைமருதூர் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.	அரசுக்கு சொந்தமான குட்டை ஆக்கிரமிப்பை அகற்றி குடிநீருக்கு ஆதாரமான குட்டையை மீட்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவிடைமருதூர் வட்டம் கோவிந்தபுரம் கிராமம் புலஎண் 172/4–ல் உள்ள குட்டை புறம்போக்கில் ஸ்ரீபோதேந்திராள் மடத்தினரால் போடப்பட்டு இருந்த சிறிய மாட்டுக் கொட்டகை (விஸ்தீரணம் 0.00.5 ஏர்ஸ்) முதலில் 31–10–2011 அன்று வட்டாட்சியரால் அகற்றப்பட்டது. பின்னர் 17–11–2011 அன்று வட்டாட்சியர் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் முன்னிலையில் மீதமுள்ள ஆக்ரமணங்களும் அகற்றப்பட்டு விட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.
[வருவாய் கோட்ட அலுவலர் கும்பகோணம் அவர்களின் கடித எண் ந.க 6183/11/அ3 நாள்: 17–11–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2344	திரு. உ. ஜோசப், 419, புஷ்பம்காலனி 2ம் தெரு, அருளானந்தநகர் 10வது குறுக்குதெரு, தஞ்சாவூர்–613 007.	புஷ்பம்காலனி 2வது தெருவில் மின்கம்பம் அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புஷ்பம்காலனி 2வது தெருவில் உள்ள மின்கம்பம் ஆணையர் தஞ்சாவூர் நகராட்சி விண்ணப்பத்தின்படி மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளது. 23–11–2011க்குள் சாலை ஓரத்தில் மாற்றியமைக்கப்படும்.	மின்கம்பங்கள் அகற்றப்பட்டுள்ளதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.
[மேற்பார்வை பொறியாளர் தமிபவ. தஞ்சாவூர் அவர்களின் கடித எண் மே.பொ/தமிபவ/தஞ்/உசெபொ/வளர்ச்சி/முநிவ/கோ/சட்டமன்ற பேரவை மனுக்கள் எண். 577/11 நாள்: 12–10–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	2349	திரு. எஸ்.எஸ். சேகர், 30, புதுநகர் பூக்குளம், காந்தை, தஞ்சாவூர்–613 002.	காந்தை–பூக்குளம் வடவாறு கரையை உயர்த்தக் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தற்பொழுது வடவாறு இடது கரை தொலைதூரம் 9.650 கி.மீ. முதல் 9.716 கி.மீ. வரை உள்ள தாழ்வான பகுதியை கிராவல் கொண்டு கரையை உயர்த்தி பலப்படுத்தப்பட்டுள்ளது. [செயற்பொறியாளர், பொபது.நீ.ஆ.அ, வெண்ணாறு வடிநில கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க. எண் 281வி/கோ.205/2011/உவ/ நாள்: 05–11–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	2369	திரு. பொ. கலியமூர்த்தி, வடக்கு பூதலூர்–613 602.	பூதலூர் கோவில்பத்து கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பூதலூர் கோவில்பத்து கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. [முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தஞ்சாவூர் அவர்களின் கடித எண் சி2/2164/2011 நாள்: 31–10–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	2389	திரு. க. சோமசுந்தரம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வாண்டையார் இருப்பு அஞ்சல், ஒத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தாநாடு ஒன்றியம், வாண்டையார் இருப்பு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், வாண்டையார் இருப்பு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 300 அடி ஆழம் உள்ள ஆழ் குழாய் கிணறு, மின்மோட்டார் 3000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் சீரான முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஊராட்சியின் மூலம் பொதுக்குழாய் அமைக்கப்பட்டு அதன் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. துணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மொத்தம் 30 அலுவலர்கள் உள்ளனர். தினசரி வந்து செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை 200. மேற்குறிப்பிட்ட அனைவருக்கும் குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே, புதிதாக மேல் நிலைநீர்த்தேக்கத் தொட்டி தேவையில்லை. [நிர்வாகப் பொறியாளர் (பொ) த.கு.வ.வா., கி.கு.தி. கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கடித எண் கோ.மனு/த.ச.பே.ம.கு/இ.வ.அ./2011–1/ நாள்: 7–10–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது. **அ.மு.பி. ஜமாலுதீன்,** *செயலாளர்.*


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS